2020 ஜனவரி 9]

இப்பொழுது ஊரக வளர்ச்சித் துறைமூலம் சின்னச் சின்ன தொட்டிகளை அதாவது அறுபதாயிரம் லிட்டர், அதிகபட்சம் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளைத்தான் கட்டுகிறார்கள். அதற்குத்தான் அந்த நிதி போதுமானதாக இருக்கிறது. அந்த நிதியில் அவ்வளவுதான் கொடுக்க முடியும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டுவது கிடையாது. சில ஊர்களில் பொதுமக்கள் கேட்கிறபொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பெயரைப் போட்டு கட்ட வேண்டுமென்று சொல்லி, கட்டிக்கொடுக்கிறார்கள். பெரிய பெரிய schemes *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக கடந்த 8 ஆண்டு ஆட்சிக் காலத்தில் நகராட்சி நிருவாகம் சார்பாக 414, சென்னை குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 43, பேரூராட்சிமூலம் 688, ஊராட்சிகள் மூலமாக 13,149, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 11,140 என மொத்தம் 25,434 குடிநீர்த் தொட்டிகள் 1,845 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. கண்டிப்பாக* TWAD Board *மூலமாகக் கட்டவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று, இன்னும் கூடுதலாகத் தேவைப்படும் இடங்களில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***52752—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் துவங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மறைந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சுற்றிவரும் பகை என்னும் சூறாவளியை சுக்குநூறாக்கி, எதிர்படும் இன்னல்களையும், இடையூறுகளையும் இடது காலால் இடறி விட்டுவிட்டு, ஏறுகொண்ட வேங்கை என வீறுநடைபோட்டு, இதய தெய்வம் அம்மாவின் ஆட்சியை அலுங்காமல், குலுங்காமல் சிறிதும் சேதாரம் ஏற்படாமல் அம்மாவின் கனவு* Vision *2023–படி தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அம்மாவின் வழியில் செல்லும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 2020–லேயே தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலம் என்ற பெருமை சேர்த்த ஆற்றல் மறவர் மேன்மைக்குரிய அண்ணன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். பொழுதும் புன்னகை மாறாமல், ஏற்றுக்கொண்ட பொறுப்பிலிருந்து ஒரு சிறிதும் மாறாமல், ஆட்சியும் கட்சியும் வீறுநடை போட்டு வெற்றிப் பாதையில் பயணிக்க, தூய உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு துணை நிற்கும் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். இப்பக்கமும் அப்பக்கமும் என எப்பக்கமும் சாயாமல் நடுநிலையோடு அவையை நடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

என்னுடைய கலசப்பாக்கம் தொகுதி மக்களில் பெரும்பாலானவர்களும், சுமார் 7,000–க்கும் மேற்பட்ட அரசு

2020 ஜனவரி 9]

ஊழியர்களும், ஆசிரியர்களும் கைத்தறி ஆடைகளையே விரும்பி அணிகிறார்கள். எனவே, இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மறுபரிசீலனை செய்து நடப்பு நிதியாண்டிலேயே கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் நவீன விற்பனை நிலையத்தைத் துவங்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் தொகுதியில் இருக்கின்ற 7,000–க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், மாணவர்கள் அனைவருமே கைத்தறி ஆடைகளை அணிய விரும்புகிறார்கள் என்று சொல்லியிருக்கிற நற்செய்திக்கு நான் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலையிலும், ஆரணியிலும் 2 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகிற கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் மூலமாக விற்பனை வளாகங்களை* exhibition *என்ற முறையிலே மேற்கொண்டு, அங்கே இருக்கிற கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், பெரிய பள்ளிகள் அனைத்திலும் தொடர்ந்து விற்பனை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஒரு விற்பனை நிலையத்தைப் புதிதாக துவங்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு கட்டடம் அவசியப்படுகிறது. அதுவும் விற்பனைக்கு உகந்த கடை வீதியில், மக்கள் போக்குவரத்து மிகுந்த இடத்தில் தேவைப்படுகிறது. வாடகைக்கு இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசுக்குச் சொந்தமான இடம் கடை வீதியில், விற்பனைக்கு உகந்த இடத்தில் கிடைக்கும் என்று சொல்வாரானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

[2020 ஜனவரி 9

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்திய தொகுதியிலுள்ள தெற்கு கோபுரம் அருகிலுள்ள கோ-ஆப்டெக்ஸ் கடை மிகப் பழமையானதாக உள்ளது. அதைத் தரமுயர்த்த வேண்டுமென்று உங்கள் வாயிலாக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற விற்பனை நிலையங்களில், கிட்டத்தட்ட 108 விற்பனை நிலையங்கள் தமிழகத்திலும், 49 விற்பனை நிலையங்கள் வெளி மாநிலங்களிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. பெரிய அளவில் இலாபத்தை ஈட்டவில்லை என்றாலும், ஓரளவு இலாபத்தில் இயங்குகிற ஒரு நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்பொழுது நன்றாகத் தெரியும். தனியார் விற்பனை நிலையங்களில் தற்போது மிகப் பெரிய அளவில்* Mall *என்று சொல்லக்கூடிய அளவிற்கு கவர்ச்சிகரமான கட்டடங்களையும் கட்டி, ஒன்று வாங்கினால் இரண்டு இலவசம், ஒன்று வாங்கினால் மூன்று இலவசம் என்றெல்லாம் சொல்லி நுகர்வோரை ஈர்க்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் போட்டியாக, அதற்கு இணையாக, நாமும் இன்றைக்கு விற்பனையை குறையாமல் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதனாலும், கையிருப்பில் இருக்கக்கூடிய நிதி வசதியின் காரணமாகவும், எல்லா கடைகளையும் இப்பொழுது மாற்றியமைக்கமுடியாதஒருநிலைஇருக்கிறது.எனினும், தற்போது பல கடைகளை தனியார் கடைகளுக்கு இணையாக, நுகர்வோருடைய கவனத்தை ஈர்க்கிற வகையில், மாற்றியமைத்துக் கொண்டு வருகிறோம். அந்த வரிசையில், மாண்புமிகு உறுப்பினர்*

2020 ஜனவரி 9]

அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் கடையையும் மிக விரைவில் மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

மருந்தகத்தை தரம் உயர்த்துதல்

***52579—திரு. ப. கந்தசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையத்தில் இயங்கி வரும் மருந்தகத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையத்தில் இயங்கி வரக்கூடிய அரசு மருந்தகத்திற்கு அருகிலேயே 30 படுக்கைகள் வசதி கொண்ட சந்திராபுரம் மேம்படுத்தப்பட்ட வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்ற காரணத்தால், மலையடிபாளையத்தில் இயங்கி வரும் மருந்தகத்தை தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி அவர்கள்.*

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி) தலைமை]